Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.6/2025

Dated 12-02-2026
Deposition of witness for : PW 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுபா | வயது | : | 67 |
| கணவர் பெயர் | : | அற்புதம் | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| கிராமம் | : | தஞ்சாவூர் | தொழில் | : | வீட்டுகுடித்தனம் |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

All **Accused present**

Ld. D. **Counsel Present**

தஞ்சாவூர் மேற்கு காவல்நிலைய தலைமை காவலர் செந்தில்குமார் **2880** என்பவர் சாட்சியை அடையாளம் காண்பித்தார்**.**

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:**

**1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன்.**

**2)இந்த வழக்கில் இறந்துபோன அற்புதம் என் கணவர் ஆவார்.**

3) 20.5.2025 **அன்று இரவு** 9.00 **மணிக்கு நான் என் கணவர் எனது பேத்தி சந்திரலேகா**

ஆகியோர் வீட்டில் சாப்பிட்டுவிட்டு இருந்தோம். கதவை சாத்திவிட்டு வீட்டிற்குள் இருந்தபோது கதவை தட்டினார்கள். நானும் என் கணவரும் போய் கதவை திறந்தோம். அப்போது கதவை திறந்தவுடன் குணா என்பவரும் சத்யதேவன் என்பவரும் ஒரே வெட்டாக என் தலையில் வெட்டினார்கள். பிறகு குணா, சத்யா மகன் அருண், சக்திவேல் ஆகியோர் என் கணவரை தலையில் வெட்டினார்கள். ரத்த வெள்ளத்தில் கிடந்தோம். செத்துவிட்டார்கள் என்று எதிரிகள் வெளியே ஓடினார்கள்.அப்போது எனது கணவர் எனது பேத்தியை பிடித்துக்கொண்டும் எனக்கு வெட்டுபட்ட காயத்திற்கு துண்டை எடுத்து கட்டிக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு போகலாம் என்று சென்றுகொண்டிருக்கும்போது மாதாகோவில் அருகே இரு சக்கர வாகனத்தில் வந்து உயிரோடு வராண்டா இவனை உயிரோடு விட்டா கேஸ் போடுவான் இவன் குமாஸ்தாவாக இருக்கான் என்று சொல்லி குணா, சத்யசீலன், என் மருமகன் சக்தி, அருண் ஆகிய 4 பேரும் திருப்பி இரண்டு கால்களிலும் முழங்காலுக்கு கீழே வெட்டியதால் என் கணவர் கீழே விழுந்துவிட்டார்..

4) மீண்டும் குணாவும் சத்யசீலனும் என் கணவரின் உயிரற்ற உடலில் முதுகில் காலால் மிதித்து மீண்டும் தலையில் செதுக்கினார்கள். சக்திவேலுவிடம் இனிமேல் வைத்துகொள்வாயாடா என்று சொல்லி வெட்டினார்கள்.

5) 16 ஆண்டுகளுக்கு முன்பாக சக்திவேலுவை என் மகள் காதலித்து திருமணம் செய்து கொண்டார். அவர்களுக்கு மூன்று குழந்தைகள். இரண்டு மகன்கள், ஒரு மகள். அவர்கள் வடக்கு வாசலில்தான் குடியிருந்தார்கள். அதன்பிறகு எனது மகள் வாழாமல் என் வீட்டில்

இருந்தது. எனது மகள் 13 வயதிலேயே திருமணம் செய்துகொண்டது. 16 ஆண்டுகள் கணவரோடு வாழ்ந்தது. அதன்பிறகுதான் எங்கள் வீட்டிற்கு வாழாவெட்டியாக வந்தது.

16) எனது மகள் நீதிமன்றம் மூலமாகதான் எனது பேத்தி சந்திரலேகாவை வளர்ப்பதற்காக அனுமதி வாங்கினார். அவருக்கு தற்போது 15 வயது ஆகிறது. சந்திரலேகா அவரது தயார் மற்றும் எனது கணவர் எல்லோரும் ஒன்றாக வசித்தோம். எனது மகள் கரகாட்டம் ஆடும். எனது வீட்டுகாரர் என் மருமகன் மீது வரதட்சணை வழக்கு போட்டிருந்தார்.

17) நீதிமன்றத்தில் வழக்கு நடந்து கீழ்கோர்ட்டில் ரூ.1லட்சம் பணம் எனது மருமகன் சக்திவேல் எனது மகள் மேனாகாவிற்கு வழங்கவேண்டும் என உத்தரவு ஆன நிலையில் எனது கணவர் ரூ.30 ஆயிரம் மட்டும் சக்திவேலுவிடம் இருந்து பெற்று கொண்டு என் கணவர் விட்டுவிட்டார்.

18) எனது மகள் எங்கள் வீட்டிற்கு வந்தபிறகு எனது மருமகன் சக்திவேல் 5 வருடம் திருமணம் ஆகாமல் இருந்தார். அதற்கு பிறகு திருமணம் செய்துகொண்டார். இரண்டாவது திருமணம் மூலம் அவருக்கு 2 மகன்கள் உள்ளார்கள். இரண்டாம் தாரம் கட்டிய பெண் ஊர் மாரியம்மன்கோவில் . அந்த பெண் பெயர் ஞாபகம் இல்லை.

19) மீண்டும் என் கணவர் எனது மகளுக்காக என் மருமகன் மற்றும் இரண்டாவது தார மனைவி மீதும் வழக்கு போட்டு நீதிமன்றம் வாரண்ட் போட்டது. ஒரு நாள் எனது கணவரும் எனது மகளும் மீன் வாங்க மார்க்ட் சென்றபோது எனது மருமகன் எனது மகளிடம் உன் அப்பனை வழக்கை வாபஸ் வாங்க சொல் என்று சொல்லியுள்ளார். அதற்கு என் கணவர்

மறுத்துவிட்டார்.

20) எனது மருமகன் மீது வாரண்ட் போட்டதால் முன் விரோதம் காரணமாக என்னையும் என் கணவரையும் வெட்டினார்கள்.

21) ஆஜர் எதிரிகள் எல்லோரையும் தெரியும். எல்லோரும் ஒரே தெருகாரர்கள்தான்.

22) என்னையும் என் கணவரையும் எதிரிகள் வெட்டிய அருவாளை என்னால் அடையாளம் காட்டமுடியும். என்னிடம் காட்டப்படும் இந்த அருவாளால்தான் முதலில் என்னை வெட்டினார்கள். அந்த அருவாள் **அ.சா.பொ.1** ஆகும். ( வெட்டும் பகுதி சற்று வளைந்த அருவாளை அடையாளம் காட்டினார்.) மற்றொரு அருவாளால்தான் என் கணவரை வெட்டினார்கள். அந்த அருவாள் **அ.சா.பொ.2** ஆகும். ( கருப்பு நிற மரக்கைபிடியுள்ள அருவாளை அடையாளம் காட்டினார்.)

23) வெட்டுபட்டவுடன் நான் மயக்கம் ஆகி கீழே விழுந்ததால் எப்படி ஆஸ்பத்திரிக்கு சென்றேன் என்று எனக்கு தெரியாது. தஞ்சாவூர் மெடிக்கலில் தலையில் தையல் போட்டார்கள்.

24) இது சம்பந்தமாக தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமனையில் தஞ்சாவூர் மேற்கு காவல்நிலையத்தில் இருந்து வந்து ஆய்வாளர் வாக்குமூலம் வாங்கினார்கள். அந்த வாக்குமூலத்தில் நான் கைரேகை வைத்தேன். அதில் உள்ள விபரங்கள் அனைத்தும் நான் சொல்லி எழுதப்பட்டது. அந்த புகார் **அ.சா.ஆ.1** ஆகும்.

25) இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

அனைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1) எதிரிகள் நால்வரும் நான் குடியிருக்கும் பகுதியிலேயே குடியிருந்த நபர்கள் என்பதால் சம்பவத்திற்கு முன்பாகவே அவர்களை நன்றாக தெரியும் என்றால் சரிதான். எனது பேத்தி சந்திரலேகா, கரந்தை உமாமகேஸ்வரன் மேல்நிலை பள்ளியில் படித்து வருகிறார் என்றால் சரிதான்.

2) சம்பவம் சர்ச் அருகில் தான் நடந்தது என்றால் சரிதான்.அந்த இடத்தில் இருந்து கரந்தை உமாமகேஸ்வரன் மேல்நிலை பள்ளி 3 கி.மீ. தூரத்தில் இருக்கும் என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் நாங்கள் குடியிருந்த வீடு ராஜாகோரி சுடுகாடு போகும் ரோடு என்றால் சரிதான். நாங்கள் குடியிருந்த வீட்டில் இருந்து அந்த பகுதியில் உள்ள சர்ச் சுமார் 1-1/2 கி.மீ. தூரத்தில் இருக்குமா என்றால் 1/2 கி.மீ தூரத்தில் இருக்கும்.

3) அரண்மனை காவல்நிலையத்தில் இருந்து இன்ஸ்பெக்டர் என்னிடம் வாக்கமூலம் வாங்கினார்.அவர் பெயர் சோமசுந்தரமா என்று எனக்கு தெரியாது. நான் வாக்குமூலம் கொடுத்தபோது எனக்கு எப்படி காயங்கள் ஏற்பட்ட விபரத்தையும் யாரால் ஏற்பட்டது என்பதையும் எந்தஇடத்தில் ஏற்பட்டது என்பதையும் மருத்துவரிடம் சொன்னேன். மருத்துவர் கேட்கும்போது எனக்கு ஏற்பட்ட காயம் என் வீட்டிற்குள் ஏற்பட்டது என்று சொல்லி இருக்கிறேன். சர்ச்க்கு அருகில் என்னை வெட்டியதாக மருத்துவரிடம் நான் சொல்லவில்லை.

4) மருத்துவரிடம் என்னை வெட்டியவர்கள் எனக்கு தெரிந்தவர்களா தெரியாதவர்களா

என்று நான் சொல்லவில்லை. மருமகன் ஆள் வைத்து வெட்டினான் என்று சொன்னேன். மருத்துவரிடம் என்னை வெட்டிய நால்வரில் ஒருவர் எனக்கு தெரிந்தவர் என்றும் மற்ற மூவரும் எனக்கு தெரியாதவர்கள் என்று நான் சொல்லவில்லை.

5) மருத்துவரிடம் என்னை தாக்கியவர்கள் கத்தி மற்றும் அருவாளால் தாக்கியதாக சொல்லி இருக்கிறேன். கைகளால் தாக்கியதாக நான் சொல்லவில்லை.

6) நான் கைரேகை வைத்தபிறகு மருத்துவரிடம் சான்றொப்பம் ஆய்வாளர் வாங்கினாரா என்று எனக்கு தெரியாது. நான் மயக்க நிலையில் படுத்து இருந்தேன். புகார் வாக்குமூலம் நான் ஆய்வாளரிடம் கொடுத்தபோது எதிரிகள் நான்கு நபர்களின் பெயரையும் சொன்னேன்.

7) என்னுடைய பெயர் சுபா என்கிற சுபாகணியா என்றால் என் பெயர்தான் சுபாதான். என் மீது 26 குற்றவழக்குகள் பல காவல்நிலையங்களில் உள்ளன என்றால் இருக்கிறது.

8) சரித்திர பதிவேடு குற்றவாளி எண்.335/1994 என்று தஞ்சாவூர் மேற்கு காவல் நிலையத்தில் இருக்கிறது என்றால் இருந்தது.

9) பல வழக்குகளில் நான் கைது செய்யப்பட்டு தஞ்சாவூர் கிளைசிறை, திருச்சி கிளை சிறை, நாகப்பட்டினம் மாவட்ட சிறை ஆகிய சிறைகளுக்கு சென்று வந்தேன் என்றால் சரிதான்.

10) புகார் நான் கொடுத்த பிறகு என்னை போலிசார் விசாரிக்கவில்லை.

11) சம்பவத்திற்கு பிறகு போலிசார் மேற்படி அருவாள்களை என்னிடம் காட்டி விசாரித்தார்களா என்றால் காட்டவில்லை. சம்பவத்திற்கு பிறகு தற்போதுதான் நீதிமன்றத்தில் மேற்படி அருவாள்களை பார்க்கிறேன் என்றால் சரிதான்.

12) சாட்சி பாபு என் மருமகன். அவர் எனது பெரிய மகளை திருமணம் செய்துள்ளார். சாட்சி சவுரிராஜ் எனது மருமகன் சாட்சி பாபுவின் சகலை என்றால் சரிதான்.

13) சம்பவத்தன்று என் வீட்டில் என்னையும் என் கணவரையும் எதிரிகள் வெட்டினார்கள் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

14) புகாரில் என்னை அருண் என்பவர் வெட்டியதாக சொல்லவில்லை. புகாரில் குணாவும், சத்யதேவனும் என்னை தலையில் வெட்டியதாக சொல்லி உள்ளேனா என்றால் அப்படி சொல்லவில்லை.

15) போலிசார் என்னை விசாரித்தபோது குணா என்பவர் என் தலையில் வெட்டியதாக சொல்லி உள்ளேன்.

16) போலிசார் என்னை விசாரித்தபோதோ, புகாரிலோ என் கணவரை பார்த்து இவன் வக்கீல் குமாஸ்தா இவனை விட்டால் கேஸ் போடுவான் இவனை விடாதாடா வெட்டுங்கடா என்று சொல்லவில்லை.

17) மீன் வாங்க போனப்ப என் மருமகன் உன் அப்பனை கேஸை வாபஸ் வாங்க சொல்லு என்று சொன்ன விபரத்தை போலிசார் என்னை விசாரித்தபோதோ, புகாரிலோ சொல்லவில்லை என்றால் சரிதான்.

18) என் மருமகன் மீது வாரண்ட் போட்டதால் முன் விரோதம் கொண்டு என் மருமகன் ஆட்களை ஏற்பாடு செய்து எங்களை வெட்டினார் என்ற விபரத்தை போலிசார் என்னை விசாரித்தபோதோ, புகாரிலோ சொல்லவில்லை என்றால் சரிதான்.

19) இரு சக்கர வாகனத்தில் வந்து இவன் உயிரோடு வராண்டா விடகூடாதுடா என்று போலிசார் என்னை விசாரித்தபோதோ, புகாரிலோ சொல்லவில்லை என்றால் சரிதான்.

20) சர்ச்சுக்கு முன்னால் என் மருமகன் சக்திவேல் மற்றும் குணா மற்றும் மற்றபேரோடு சேர்ந்து வெட்டினார்கள் என்று போலிசார் என்னை விசாரித்தபோதோ, புகாரிலோ சொல்லவில்லை என்றால் சொல்லி இருக்கிறேன்.

21) எங்களை வெட்டிவிட்டு போய்விட்டு திரும்பி மாதாகோவிலுக்கிட்ட இரு சக்கர வாகனத்தில் வந்து வெட்டினார்கள் என்று போலிசார் என்னை விசாரித்தபோதோ, புகாரிலோ சொல்லவில்லை என்றால் சரிதான்.

22) என் கணவர் வெட்டுபட்டு கீழேகிடந்தபோது நான் தூக்கி பார்க்கவில்லை. என் தலையில் வெட்டுபட்டதால் என் புடவை, ஜாக்கட் ஆகியவற்றில் ரத்தக்கரை படிந்து இருந்தது என்றால் சரிதான்.

23) போலிசார் என்னை விசாரித்தபோது மேற்படி ரத்தக்கரை படிந்த ஜாக்கட், சேலையை நான் ஒப்படைக்கவில்லை.

24) என் பெரிய மருமகன் பாபுவும் மூத்த மகள் தேவிகாவும் மேனகா என்ற பெயரில் கரகாட்ட குழு நடத்தவில்லை. பாபுவும் , தேவிகாவும் தனியாக கரகாட்டம் ஆட போவார்கள்.

25) 1 வதுஎதிரி அருணின் அம்மா சத்யகலா கரகாட்டம் ஆட செல்வார்.

25) சம்பவத்திற்கு 10 நாட்களுக்கு முன்பு கரகாட்டம் ஆடுவதற்காக சத்யகலாவை பாபு அழைத்தபோது சத்யகலா வரமறுத்துவிட்டார் என்றும் அதனால் பாபுவுக்கு மனவருத்தம்

ஏற்பட்டது என்று சொன்னால் தவறு. இது சம்பந்தமாக 1வது எதிரி அருண் என் பெரிய மருமகன் பாபுவிடம் வந்து கேட்டு தகறாறு ஏற்பட்டது என்றால் தவறு.

26) தஞ்சாவூரில் செக்கடி, ராஜராஜசோழன் நகர், குத்தாலம் தெரு ஆகிய பகுதிகளில் நான் குடியிருந்தேன் என்றால் சரிதான்.

27) என் கணவர் எந்த வழக்கறிஞரிடமும் குமாஸ்தாவா இல்லை என்றால் தவறு. பாலகிருஷ்ணன் என்ற வழக்கறிஞரிடம் பதிவு செய்தார். சுப்பிரமணியன் என்ற வழக்கறிஞரிடம் வேலை பார்த்தார்.

28) என் பெரிய மருமகன் பாபுதான் என் மீது போடப்பட்ட வழக்கிற்கு உதவியாக இருந்தார் என்றால் தவறு.

29)என் கணவர் இறந்தபிறகு நான் தலைமறைவு ஆகவில்லை. என் கணவரின் உடலை காலை 9 மணிக்கு உட,ற்கூராய்வு செய்யவில்லை. பகல் 1.30 மணிக்குதான் உடற்கூராய்வு செய்தார்கள்.

30) 1வது எதிரி அருணை விடியற்காலை 4 மணிக்கு அழைத்து வந்து காவல்நிலையத்தில் வைத்திருப்பதாக போஸ்ட்மார்ட்டம் நடக்கும்போது போலிசார் என்னிடம் சொல்லவில்லை.

31) எங்கள் குடும்பத்தில் 1வது எதிரி அருண்தான் நன்றாக படித்து மேற்படிப்பு படித்து சென்னையில் வேலை பார்க்கிறார் என்றால் தவறு. அவர் மீது கஞ்சா வழக்கு, ரவுடி வழக்கு இருந்தது. நான் சொல்வதுபோல் அவர் மீது கஞ்சா கேஸ், ரவுடி வழக்கு இல்லை என்றால் சரியல்ல.

32) என் கணவரை யாரோ அடையாளம் தெரியாத சில நபர் ஒரு அடையாளம் தெரிந்த நபர் முன்விரோதம் காரணமாக வெட்டிவிட்டார் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

33) என் கணவருக்கு பல நபர்கள் மீது மொட்ட பெட்டிசன் போட்டு அதனால் பல விரோதிகளை சம்பாதித்து உள்ளார் என்றால் சரியல்ல.

34) கடந்த 2 ஆண்டுகளாக கால் நடக்க முடியாமல் உள்ளேன் என்றால் சரிதான்.

மறு விசாரணை

இல்லை.

/உண்மை நகல்/

ஒம்/-P.வேல்முருகன்
முதன்மை மாவட்ட நீதிபதி
தஞ்சாவூர்